ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) 13-4-2023 அன்று காலை திருமதி ஆ. தமிழரசி அவர்கள் கேள்வி கேட்ட சமயம்-பேரவைத் தலைவர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் நீக்கம்-சில ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிடுவதை நிறுத்த ஆணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலையில் வினாக்கள்-விடைகள் நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்களை கேள்வி கேட்க நான், 'மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி' என்று அழைத்தேன். அப்போது அவர் கேள்வி கேட்க எழுந்து நின்றார். அப்போது, அவையில் சற்று அமைதி இல்லாமல், சப்தங்கள் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்ததால், நான், அப்போது, 'மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்' என்றும், ** என்றும் சொன்னேன். நான் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அத்துடன், அவ்வாறு நான் கண்டித்தது, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்களை, என்று தவறாக இன்று சில பத்திரிகைகள், ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் வருவதாக, மாண்புமிகு தமிழரசி அவர்கள் என்னிடம் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் பேசுவது சபையில் கேட்கவில்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கேட்கவில்லை; அவர் பதில் சொல்ல வேண்டுமே! எனவேதான், அவையில் அமைதி காக்கின்றவண்ணம், 'எல்லோரும் அமைதியாக இருங்கள்' என்று அமைதி காக்கும் நோக்கத்தில்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

கூறியதை, 'மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்களை சபாநாயகர் கண்டித்தார்' என்ற அடிப்படையில் தவறாக செய்திகள் ஒளிபரப்பு செய்து கொண்டிருந்தால், அதை நிறுத்தும்படியும், இனி ஒளிபரப்பு செய்யப்படுகின்ற செய்திகளில் அப்படிப்பட்ட செய்திகள் வராமல் இருக்க வேண்டும் என்றும் பேரவையின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,742,29,20,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.8,226,50,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.